# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

டர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 31 செவ்வாய்க்கிழமை (17.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:321


# வடக்கு - கிழக்கு இணைப்பு அரசமைப்புக்கு முரணானது!

## செல்லுபடியற்றது; சட்டவிரோதமானது உயர்நீதிமன்றம் ஏகமனதாகத் தீர்ப்பு

கொழும்பு,ஒக்ரோபர்17

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கும் விதத்தில் 1998 இல் - 18 ஆண்டுகளுக்கு முன்னர் - அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன விடுத்த வர்த்தமானி அறிவித்தல் அரசமைப்புக்கு முரணானது; செல்லுபடியற்றது; சட்டவிரோதமானது. அத்தோடு, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் கூட இந்த இணைப்பு உத்தரவு மீறுகின்றது.

- இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் நேற்று ஏகமனதாகத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் நிமால் ஜயசிங்க, நிஸங்க உடலாகம, ராஜா பெர்னாண்டோ, நிமால் காமினி அமரதுங்க ஆகியோரைக் கொண்ட ஆயமே நேற்று 23 பக்கங்களைக் கொண்ட தனது தீர்ப்பில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு மூலம் தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன எனத் தெரிவித்து ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகர, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லஸந்த பியதிஸ்ஸ மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்

(05ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டுவீச்சில் புதுக்குடியிருப்பில் சிறுமி பலி!

கொழும்பு,ஒக்.17

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுமாலை இலங்கை விமானப்படையின் கிபிர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் சிறுமி ஒருத்தி கொல்லப்பட்டார்; 11 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் 14 வயதுடைய தவராசா துஷ்யந்தினி என்ற சிறுமியே கொல்லப்பட்டவராவார். காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-12)

# கடற்படை வாகன அணி அழிவு

# 100 சிப்பாய்கள் பலி! 150 பேர் காயம்!!

**ஹபரணையில் வெடி குண்டு ட்ரக் மூலம் தற்கொலைத் தாக்குதல்!**



தாக்குதலுக்கு இலக்கான பஸ்ஸும் சிதறிக் கிடக்கும் சடலங்களும்...

கொழும்பு, ஒக்ரோபர் 17

அரச படைத் துருப்புகள் தமது பயணத்தின்போது இடம் மாறிச் செல்லும் தரிப்பு நிலையம் ஒன்றின் மீது வெடிப்பொருள்கள் நிறைந்த ட்ரக் மூலம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் கடற்படையினர் நூறு பேர் வரை உயிரிழந்தனர்; மேலும் 150 படையினர் வரை படுகாயமடைந்தனர்.

ஹபரணைக்கு அருகே திஹணபதன என்ற இடத்தில் நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

திருகோணமலை - தம்புள்ள இடையிலான 'A6' வீதியில் தம்புள்ளவுக்கும், ஹபரணைக்கும் இடையில் - 101 மற்றும் 102 ஆவது மைல் கற்களுக்கு மத்தியில் - இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

கிழக்கில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு, பொலன்னறுவை மாவட்டங்களிருந்து தெற்கே பயணம் செய்யும் படையினரின் வாகன அணிக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படுவது வழமை. (06ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் வீழ்ந்து வாவியில் மூழ்கியது

கொழும்பு,ஒக.17

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 'கிபிர்' குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து மூழ்கியது.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு குறித்து விமானி கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் கொடுத்தார் என்றும் -

அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய விமானி பாதுகாப்புப் கவசத்துடன் தரையிறங்கினார் என்றும் -

(06ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு சமாதானத்தில் நம்பிக்கையில்லை அதைப் பிரதிபலிப்பதே நேற்றைய சம்பவம்

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கருத்து

கொழும்பு,ஒக்.17

நேற்றைய தாக்குதல் சம்பவமானது விடுதலைப் புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் சமாதானத்தின் மீது நம்பிக்கை இல்லை என்னும் தகவலை அனுப்பியது போன்றே உள்ளது''

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கையின் பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல.

நேற்று ஹபரணையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கூறியதாவது:- (06ஆம் பக்கம் பார்க்க)

## களநிலை தவிர்ந்த பகுதிகளில் இலக்கு வைக்க வாய்ப்புள்ளது

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

''கள நிலைகளில் நடத்தப்படுகின்ற தாக்குதல்களைவிட களநிலைகளுக்கு அப்பால் படையினர்மீது இலக்கு வைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.''

- இப்படித் தெரிவித்திருக்கிறார் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன்.

நேற்றிரவு பி.பி.ஸி. வானொலிக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரச படைகளும் அதன் விமானங்களும் களநிலைக்கு அப்பால்

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் பரவலாக நேற்று ஆறு பேர் படுகொலை

**நகரப்பகுதியில்**

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணம் பழைய சந்தைப் பகுதியில் கடை ஒன்றில் வைத்து நேற்றுக்காலை குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்து கொக்குவில் மேற்கு, கேணியடியில் வசித்தவரான அரியதுரை அரியசிவம் என்னும் 4 பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

யாழ். நகரில் உள்ள தமது தேநீர் கடையைத் திறந்து வியாபாரம் செய்துகொண்டிருந்த வேளையிலேயே அவர் சுடப்பட்டார்.

ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் மரணமடைந்தார்.

(202-68-88)

**அரியாலையில்**

அரியாலை மத்தியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த கிராம அலுவலர் ஒருவர் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அரியாலை மத்தி கிராம அலுவலரான க.மகேந்திரன் (வயது 40) என்பவரே மரணமானவர் ஆவார்.

கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் பொதுமக்களை விலகிச் செல்லுமாறு கூறிவிட்டு கடமையில் இருந்த கிராம அலுவலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

சில நிமிடங்களில் கொலையாளிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(49-202-68-139-79)

**சித்தன்கேணியில்**

சங்கானை,ஒக்.17

சித்தன்கேணி டச்சுவீதியில் தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்று காலை 8.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த செல்லையா நந்தகுமார் (வயது 46) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார்.

அவர் வீட்டில் இருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரைக் கூப்பிட்டு வீட்டு வாசலில் வைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் சங்கானை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(203-29)

**வியாபாரிமூலையில்**

உடுப்பிட்டி,ஒக்.17

பருத்தித்துறை, வியாபாரிமூலையில் நேற்று அதிகாலை 6.45 மணியளவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வியாபாரிமூலை, நாச்சிமார் வீதியைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான திரணகம சூரசிங்க (வயது 56) என்பவரே மரணமானவராவார்.

அதிகாலையில் பாண் வாங்குவதற்காகச் சென்ற வேளை அவர் சுடப்பட்டார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

(1-155-173)

**பருத்தித்துறையில்**

கரவெட்டி,ஒக்.17

பருத்தித்துறை ஓடக்கரையில் பத்திரகாளி கோயிலடியில் வைத்து நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் முஸ்லிம் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை, சின்னப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த ஹயத் முகமது முஸ்தபா (வயது 45) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் விசாரணைகளை நடத்திய பின் சடலத்தை பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

(1-15-155)

**கரவெட்டியில்**

கரவெட்டி ஞானாசிரியர் வீதியில் மயானம் ஒன்றில் வைத்து நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கரவெட்டி சம்பந்தர் கடையடியைச் சேர்ந்த இளையதம்பி என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். (1-155)


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள், [illegible] படிக்கும் பிள்ளைகள் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் தரப்படும்.

தொடர்புகளுக்கு: தொ.இல.: 222 3605



**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை அதிபர் கணேச பாலேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லத்துரை தாமோதரம்பிள்ளை**

அவர்கள் காலமாகியதையிட்டு துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலி செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.



**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவனத்தில் HNDBS கல்விகற்கும் சக மாணவி கௌரியின் அன்புத் தந்தை

**சரவணமுத்து பஞ்சவர்ணம்**

அவர்கள் அகால மரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

1 ஆம் வருட சக மாணவர்கள்,
யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவனம்.

(54439)



**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**தரம் - 6 அனுமதி-2007**

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 2007 இல் தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தரம் -8 இற்கும் சில வெற்றிடங்கள் உள்ளன.
விண்ணப்ப முடிவு திகதி: 03.11.2006

-அதிபர்.


## மரண அறிவித்தல்

### அரியதுரை அரியசிவம் (சிவம்)



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஐயானார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அரியதுரை அரியசிவம் (சிவம்-தேனீர்க் கடைஉரிமையாளர்) அகாலமரணமானார்.

அன்னார் அரியதுரை ஜீவரட்ணத்தின் செல்வப் புதல்வனும் உமாவதியின் பாசமிகு கணவரும் துர்காஜனி, கஜவதனன், துளசிகா, கலையழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன் - கமலாதேவி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார்கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மனைவி

(54442)

# பொதுமக்களுக்கு இன்று பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கு ஏற்கனவே பெற்றோல் பெற்றுக்கொள்ளாத பொதுமக்களுக்கு விநியோகம் இன்று நடைபெறவுள்ளது.

ஒரு பங்கீட்டு அட்டைக்கு 200 ரூபா என்ற விகிதத்தில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும் -

திருநெல்வேலி குகன் எரிபொருள் விநியோக நிலையம் தவிர்ந்த ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஏனைய எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் விநியோகம் இடம்பெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்திலும் இன்று தனியாருக்கு பெற்றோல் வழங்கப்படவிருக்கின்றது.

**நேற்று ஏமாற்றம்**

அதேவேளை -

'மார்க்பெட்' எரிபொருள் நிலையத்தில் தனியாருக்கு நேற்றுப் பெற்றோல் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து பெரும் எண்ணிக்கையானோர் 'கியூவில்' காத்திருந்தனர் என்றும் -

ஆனால், பின்னர் விநியோகம் இடம்பெறாததால் மக்கள் ஏமாற்றத்துடன் சென்றனர் என்றும் அறியவந்தது. (1-202)

# நல்லூர் பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை நடத்தும் சிறப்பு நிகழ்வுகள் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளன.அன்றையதினம் கொக்குவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நூலகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் மாணவர்களின் நலன் கருதி குறைந்த செலவில் அங்கத்தவர்களாக இணைவதற்கான ஏற்பாட்டை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் தத்தமது பாடசாலை அதிபர்களின் சிபார்சுக் கடிதத்துடன் தமது பெயர் விவரங்களை கொக்குவில் பொது நூலக நூலகரிடம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

கொக்குவில் பொது நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நேரடியாகவோ, உத்தியோகத்தர்களிடமோ கையளிக்குமாறு நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர். (202-79)


சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் சுப மங்களகரமான விய வருஷம் ஐப்பசி மாதம் 2ஆம் நாள் (19.10.2006) வியாழக்கிழமை காலை 7.50 மணி தொடக்கம் 10.23 மணிவரையுள்ள சுப முகூர்த்த சுபவேளையில்

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| **சிவச்செல்வன்** | **காயத்திரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் முருகானந்த கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ஆ.சிவராசா,
C.P.M. வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி ச.ஜெகசோதிராசா
ஆனைக்கோட்டை மேற்கு,
ஆனைக்கோட்டை.

(54435)



**அதிர்ஷ்டம் இருக்கிறதா!!!**

DV 2008 அமெரிக்க லொத்தர் விசாவுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒரு பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**திருமுருகன் கொம் நெற்**

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

259, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 222 7835



**தேவை**

சன் ரெல் தொலைபேசி தேவை.

தொடர்புகளுக்கு:
021 4590035



**அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

ஆரம்பம்: 18.10.2006 பிற்பகல் 2.15
கிழமை நாள்களில் 2.15 - 3.45
சனி, ஞாயிறு வகுப்பு- வகுப்பில் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்: த.தவசேகர்

Science Hall கன்னாதிட்டி



**Arul Communication**
**Refugee & Humanitarian Visa**

ஆஸ்திரேலியா, மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

No.1, Brown Rd.
Jaffna.

T.P.: 222 3536
Fax: 222 3615

(54444)


## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு மகேந்திரன் (பாபு மாஸ்ரர்)

(கிராம சேவையாளர், J/ 95 அரியாலை)



அரியாலை, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு மகேந்திரன் நேற்று (16.10.2006) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு-மங்கையர்க்கரசி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் துரைச்சுவாமி - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் மீராவின் (ஆசிரியை- செங்குந்தா இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் சங்கீதன் (புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம்), துவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவீந்திரன் (போதனாசிரியர், ஆங்கிலப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), ரஜினிமாலா, சாந்தினிமாலா (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்), தர்சினிமாலா (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் இரவீந்திரநாயகம் (நிலஅளவையாளர், வவுனியா), விமலாதேவி, தர்மராஜன் (ஆசிரியர், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), தங்கராஜா (கொழும்பு), சியாமிளாதேவி (கனடா), சிறீமோகன் (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சிறீராகவன் (பிரான்ஸ்), சிறீவிஜயன் (கனடா), மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் தருவிக்கப்பட்ட பால்மாவில் ஒரு பகுதி வைத்தியசாலைக்கு ஒதுக்கீடு

## யாழ்.அரச அதிபர் தகவல்

கல்வியங்காடு, ஒக்.17

குடாநாட்டிற்குக் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட பால்மா வகைகளில் ஒரு தொகுதியை யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பிரதி மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கும் ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் குழந்தைகளின் போசாக்கு மட்டத்தைக் கருத்தில் கொண்டும் இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குழந்தைகளுக்கான பால்மா 100 பைக்கற்றுகள் உட்பட 150 பால்மா பைக்கற்றுகளும், யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு அங்கர் 5 ஆயிரம் பைக்கற்றுகளும் நெஸ்பிறே 5 ஆயிரம் பைக்கற்றுகளுமாக பால்மா வகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-79)

# மீன் சந்தையை புனரமைக்க 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு

நல்லூர்,ஒக்.17

பண்ணை, நாவாந்துறை பகுதிகளில் உள்ள மீன் சந்தைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ்வேலைத் திட்டங்களுக்கென பிரமாண அடிப்படையில் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

(203-111)

# ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கு துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள்

யாழ்.மாவட்டத்திலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

மாணவர்களின் இழந்த கல்வியை மேம்பாடடையச் செய்து பரீட்சைக்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்களைத் தயார் செய்யும் நோக்குடனேயே இவ் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான உதவிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கவுள்ளது. இப் பயிற்சி வகுப்புக்குத் தேவையானகாகிதாதிகள் மற்றும் ஏனைய பொருள்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கி உதவவுள்ளது.

(205-182)



யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது தென்மராட்சிப் பகுதியில் அகால மரணமான பஞ்சாட்சரம் கிருபாகரன் என்பவரின் இழப்பீட்டுத் தொகை சிலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

காப்புறுதித் தொகை 32 லட்சத்து 18 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் வி. சுதர்ஷன் உறவினரிடம் வழங்குவதையும் அருகில் யாழ்.கிளையின் முகாமையாளர் பா.நந்தகுமார் மற்றும் விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான சி.சிவனேசன், ம.கொறஸ்ரியன், கே.பிரதீபன், கு.பிரகாஷ் ஆகியோர் படத்தில் நிற்பதையும் காணலாம்.

(202)

# வடமராட்சியில் குழந்தைகளுக்கான பால்மாவை சுகாதார அதிகாரி மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு

வடமராட்சி, ஒக்.17

வடமராட்சிப் பிரதேசத்தில் குழந்தைகளுக்கான பால்மாவைப் பெற்றுக்கொடுப்பதற்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உத்தியோகத்தர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கென ஒரு தொகுதிப் பால்மா யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தந்தப் பகுதி குடும்பநல உத்தியோகத்தர்கள் ஊடாக குழந்தைகளுக்கான பால்மா விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

## மந்திகைப் பகுதியில் நாய்கள் அழிப்பு

வடமராட்சி,ஒக்.17

மந்திகைச் சந்தையில் திரிந்த கட்டாக்காலி நாய்கள் பருத்தித்துறைப் பிரதேச சபையால், மேற்படி பகுதிக்கான சுகாதாரப் பரிசோதகரின் அனுசரணையுடன் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. (202)

## இழந்த கல்வியை மீட்கும் கையேடு

தென்மராட்சி,ஒக்.17

அசாதாரண சூழ்நிலை காரணமாக தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வியைத் தொடர முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர். இவர்களின் இழந்த கல்வியை மீட்கும் வகையில் சுயகற்றல் கையேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தரம் 4 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கே இக் கையேடுகள் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் வலயக் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட இக் கையேடுகள் மாணவர்கள் தமது இழந்த கல்வியை விரைவில் மீட்கக் கூடிய வகையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

# பாடசாலைகள் மீள ஆரம்பமாகியும் மாணவர்களுக்கு உணவு கிட்டவில்லை

## வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி பெற்றோர் விசனம்

வடமராட்சி கிழக்கு, ஒக்.17

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், மாணவர்களுக்கான காலை உணவு வழங்கும் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படவில்லை என பெற்றோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் வடமராட்சி, தென்மராட்சிக் கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 9 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு கடந்த காலங்களில் காலை உணவு வழங்கப்பட்டு வந்தது. பாடசாலைகள் இடை நிறுத்தப்பட்டு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் காலை உணவு இதுவரை வழங்கப்படவில்லை என முறைப்பாடுகள் கூறப்படுகின்றது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவது அவசியமாகின்றது.

கடந்த காலங்களில் உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைத்த காலங்களின் மாணவர்களின் போசாக்கில் அக்கறை காட்டப்பட்டது. அதேபோன்று தற்போதும் சகல மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் அத்தியாவசியமானதும் பயனுள்ளதும் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

காலை உணவுக்கான காய்கறி மற்றும் பொருள்கள் கொள்வனவுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு ரூபா 50 சதம் என செலவுப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய விலையேற்றத்தால் அத்தொகை உணவுப் பொருள் கொள்வனவிற்கு போதாது எனவும் கூறப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என பெற்றோரும்,மாணவர்களும் கேட்டுள்ளனர். (202-182)

# குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த 6ஆம் திகதி வெளியான ஜி.சீ.ஈ உயர் தரப்பரீட்சையின் தமது மாணவர்களின் முன்னணிப் பெறுபேறுகளை மேலும் சில பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்

அவற்றின் விவரம் வருமாறு:-

***வேலணை மத்திய கல்லூரி***

**கலை**

க.டர்சினி-3ஏ, வி.துஷாயினி-2ஏபி, இ.தர்சினி-2ஏபி, க.தேவபாலன்-2ஏசி, மா.நிவேதிகா-3பி, வ.ஜிமித்திரா-2பிசி, ஞா.தாரணி 2பிசி, த.ஜனார்த்தனி- 2பிசி, வி.பகீரதன்- 2பிசி.

**வர்த்தகம்**

கி.வினோதன்-ஏ2பி, ர.உதயன்-ஏ2சி.

***வயாவிளான் ம.ம.வித்தியாலயம்***

**கலை**

த.சதீஸ்-3ஏ(மாவட்ட நிலை 9), ச.பாலரஞ்சன்-3ஏ, சு.ரோகினி-3ஏ, செ.செந்தூரன்-3ஏ, ந.திஷாந்தினி-3ஏ, ச.திவ்யா-2ஏபி, ச.சிறைச்செல்வி-2ஏபி, ம.ஜெனோபா-2ஏசி, நா.நதீஸ்குமார்-2ஏ சி, இ.மயூரி-ஏ2பி, ம.மயூரி-2ஏசி, பா.விஜிதா-2ஏபி, சி.பிறின்சி-2ஏபி, ச.கமலினி-2ஏசி, வ.விஜயபாஸ்கரன் -2ஏசி.

**வர்த்தகம்**

சு.கிரிசாந்-3ஏ, இ.கஜானந்தன் -2ஏசி.

**விஞ்ஞானம்**

ச.பிரசன்னா-3பி, வ.கயல்விழி-2பிசி.

**கணிதம்**

சி.லாவண்யன்-ஏபிஎஸ்.

***சாவகச்சேரி இந்துக் கல்லூரி***

**கணிதம்**

கா.காந்தபாலன்-3ஏ, சி.அபர்ணா-3ஏ, சி.மயூரன்-2ஏபி, த.அபிராம்-2ஏபி, பிரதாபன்-ஏ2பி, ஜெ.ரமணன்-ஏ2பி, ச.கணராஜன்-ஏ2பி, தே.ஜெயகரன்-ஏ2சி, க.கர்ஷன்-2பிசி, ஐ.ரஜீபன்-2பிசி, தெ.செந்தூரன்-2பிசி, இ.சசிலன் 2பிசி.

**உயிரியல்**

த.ஜெய்சுந்தர்-3ஏ, க.சசிமாறன்-3பி, த.செந்தூரன்-3பி, அ.குமுதா-2பிசி.

**வர்த்தகம்**

வ.ஞானவரதன்-3ஏ, ந.வேணுகா-2ஏபி, யோ.அரசுனன்-2ஏசி, அ.ஸ்ரீரூபி-ஏ2பி.

**கலை**

சி.பானுசிறி-3ஏ, ந.கார்த்திகா-3ஏ, ந.கபிலராஜ்-2ஏபி, பொ.பாரதி-2ஏபி, கே.கபிலரூபா-2ஏபி, கு.அம்பிகை-2ஏபி, ம.சுபத்திரா-2ஏபி, தி.கோபிநாத்-2ஏசி, ஜெ.சகிர்தா-2ஏசி, இ.ரஞ்சிதா-2ஏசி, கோ.மகுடபதி-ஏ2பி, தி.கௌசிகா-ஏ2பி.

***புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்***

சி.அனுஷிா-2ஏபி, வி.பாஸ்கரன்-2ஏசி, கி.டிசானி-ஏ2பி, மு.மரிய விநோதினி-ஏபிசி, அ.கிருபமலர்-2பிசி, வி.அஜந்தா-ஏபிசி, ம.அன்ரனஸ்-ஏ2சி

***காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி***

**கணிதம்**

க.கமலதீபன்-2ஏபி.

**கலை**

து.ரஜனிகா-பிசிஎஸ்,

**வர்த்தகம்**

சு.சுகிர்தா-பி2சி, க.தனலக்சுமி-பி2சி, க.தவராசா-பி2சி.

***இணுவில் இந்துக் கல்லூரி***

**கலை**

சி.லகிதா - 2ஏபி, க.கஜேந்தினி - ஏ2பி, ஜே.போல் அன்ரன் - ஏ2பி, வா.றஜிதா - ஏபிசி, க.சமலதாஸ் - ஏபிசி, வி.ரஜந்தினி - ஏபிசி, ந.தர்சினி - ஏபிஎஸ், ர.கிசாயினி - ஏபிசி.

***வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி***

**வர்த்தகம்**

கே.சிவப்பிரகாசம் - 3ஏ, ரி.பிரியதரன் ஏபிசி -

**கணிதம்**

கே.சுலக்சன்-3ஏ(மாவட்ட நிலை 6), என். மகிந்தகுமார்-3ஏ(மாவட்ட நிலை 8), ரி.சாரங்கன்-2ஏபி, ஜே.தனுசன்-2ஏபி, ஜி.ரனிஷ்-ஏ2பி, எஸ்.சுரேசன்-3பி.

**கலை**

எஸ்.சாருஜா-3ஏ, எஸ்.கோகுலன் 2ஏபி, ஆர்.பாலு-2ஏபி, பி.சர்மிளா -ஏ2பி, பி.ஹேமபிரியா-ஏபிசி

***இராமநாதன் கல்லூரி***

**வர்த்தகம்**

த.தர்சிகா-2பிசி, து.துவாரகா-3சி

**கலை**

பா.கார்த்திகா-2ஏபி, அ.சித்திரா-2ஏசி, த.சபிதா-2ஏசி, கே.கனிஷ்டா-ஏபிசி, ஆர்.கேதுசா-ஏபிசி,என்.மான்மகள்-ஏபிசி, ஜே.லக்ஷிகா-ஏபிசி, எஸ்.சுதாஜினி-ஏ2சி, எஸ்.றஜிதா-ஏ2சி, பா.அபிராமி-3சி, பத்மலோஜினி -ஏ2சி, சுயந்தினி - 2பிசி

***இடைக்காடுமகாவித்தியாலயம்***

**கணிதம்**

ச.சுமன்-2ஏபி (மாவட்ட நிலை 10), சி.சுகன்யா-2பிசி, க.கிருஷாந்தர்-3சி.

**கலை**

க.விநோதினி-ஏபிசி, ஆ.செந்தூரன் - 2பிசி.

***அம்பன் ஏ.எம்.ரி.எம் பாடசாலை***

**கலை**

லோ.கனிமொழி-2ஏபி, சி.புனிதமலர் - ஏ2பி, த.[illegible]-2ஏபி.

***[illegible] வேலாயுதம் ம.வி.***

எஸ்.ஞானகணேசன்-ஏ2பி, எஸ்.பழனி -ஏ2பி.

***புற்றளை ம.வி.***

**கலை**

இ.வித்தியா - ஏ2பி, ஜெ.வசந்தி - பி2சி-

***வடஇந்து மகளிர் கல்லூரி***

**உயிரியில்**

தி.சர்மிளா -ஏ2பி, வி.கஜேந்தினி -ஏ2சி

**வர்த்தகம்**

ர.கார்த்திகா-2ஏபி, த.பிறேமிலா-ஏ2பி , வி.வினோதினி-2ஏசி, த.உதயராணி -ஏ2பி, ப.ரஜிதா-2பிசி, ப.அனோஜன்-ஏ2பி, வி.நிலானி-ஏபிசி.

**கலை**

சி.சிவரூபி-3ஏ, ஆர்.பிரகலா-3ஏ, கி. சுரேகா -2ஏபி, ரா.சாயினி-2ஏபி, ரா.சுபாஜினி-2ஏசி, ம.நிலோஜனா-ஏபிசி, சி.துர்க்கா-ஏபிசி, ந.ரதீபா - 3பி, த.தர்சிகா - 3பி.

***கட்டைவேலி ஞானாசிரியார் கல்லூரி***

**கலை**

ந.சிவதாரணி-ஏபிசி, த.கவிதா-2பிசி, பா.பிரியதர்சினி-2பிசி.

கரவெட்டி விக்னேஸ்வராகல்லூரி

**விஞ்ஞானம்**

அ.அனிதீபா - ஏபிசி

**கணிதம்**

கு.அன்டார்சியா-2பிசி, ஆ.துஷ்யந்தன் -பி2சி

**வர்த்தகம்**

கை.திருக்குமரன்-3ஏ (மாவட்ட நிலை -1)

**கலை**

மு.மயூரிக்கா-ஏ2பி, க.இளவரசன்-ஏ2பி, இ.ரவிசாந்-ஏபிசி, ந.ரஜிபன்- ஏபிசி, பொ.வர்ணன்-ஏ2பி, ந.தர்சிகா-ஏ2சி, இ.விஜிதரன் - ஏ2சி, ச.சூரியகீத்தனா-ஏ2பி, ச.நளினி-ஏ2பி, யோ.வித்யா-ஏபிசி, யோ.கோபிகா-ஏபிசி, கு.பிரதீபா - ஏபிஎஸ். (203-78-79-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்புரவற்ற முறையில் பொது மலசலகூடம்

யாழ்.பஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகரசபையின் மலசல கூடம் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த மலசலகூடத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து ஒருவருக்கு இரண்டு ரூபா வீதம் அறவிடப்பட்டு வருகின்றது. இருந்த போதும் மலசலகூடம் துப்புரவின்றி காணப்படுகின்றது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-155)


## வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராண பூர்த்தியும்

எதிர்வரும் ஐப்பசித்திங்கள் முதலாம்நாள்(18.10.2006) புதன்கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராண பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகின்றோம்.

அன்றையதினம் காலை 6.30 மணிக்கு மூலவர் பூசை ஆரம்பமாகி கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்றுமுருகப் பெருமான் எழுந்தருளி வீதிவலம் வந்து அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! முருகன் அருள்பெறுக!

தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம்,
கரவெட்டி.


## கண்ணீர் அஞ்சலி



**இராசரத்தினம் இரத்தினவேல்(J.P.)**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்(O.A) கச்சேரி யாழ்ப்பாணம்)

அன்னார் திருகோணமலையில் காலமானார் என்ற செய்தி அறிந்ததும் ஆறாத் துயரில் ஆழ்ந்தோம். அவர் தாவடியில் பிறந்தாலும் அவரது தாயார் பிறந்த குப்பிழான் மண்ணை நேசித்தவர். தாயாரின் உறவினர்களின் அன்புக்குரியவர். அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தந்துதவியவர். அன்னாரது பூதவுடலை இன்றுள்ள சூழ் நிலையில் காணாது கண்கலங்கி நிற்கின்றோம். துயருறும் மனைவி, பிள்ளைகளின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குப்பிழான்,
காசிவாசி செந்திநாதையர் வீதி,
ஏழாலை கிழக்கு. (54422)

உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்,
த.தருமலிங்கம்(J.P.)

## கண்ணீர் அஞ்சலி



**இராசரத்தினம் இரத்தினவேல் (J.P.)**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்(O.A)கச்சேரி, யாழ்ப்பாணம்)

கடந்த 12.10.2006 அன்று காலமான அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(54416)

உரும்பிராய் கிழக்கு,
அரச வீதி வாழ் மக்கள்.

## இதய அஞ்சலி



யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் குழுமத்தின் உப தலைவர்
திரு.க.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா கனகம்மா**
அவர்கள்

இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(ச-51167)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் குழுமம்.
J.H.C.O.S.U

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி கந்தையா கனகம்மா**



திரு.கந்தையா தர்மகுலசிங்கம், பிரதம பாதுகாப்பு அதிகாரி, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் அவர்களின் பாசமிகு அன்னையின் மரணச் செய்தி கேட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.காரியாலய உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரர் கந்தையா கனகம்மாவிற்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.காரியாலய உத்தியோகத்தர்களும்,
பாதுகாப்புப் பகுதியினரும்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
57, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(54423)

## புதிய வெளிநாட்டு தூதுவர் ஐவர் நியமனக் கடிதங்கள் கையளிப்பு

இலங்கைக்கான ஐந்து புதிய வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது நியமனங்களை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இலங்கைக்கான பாகிஸ்தானின் தூதுவராக எயர்வைஸ் மார்ஷல் ஷஷ் சாட், வடகொரிய தூதுவராக க்குவான்யேன் டெல், கனடாவின் தூதுவராக எஞ்சலா போக்டோன், மொரோக்கோவின் தூதுவராக மொஹமட் ரேடா, சைப்பிரஸின் தூதுவராக ஹேன்றிஸ் சினோனவும் நியமனம் பெறுகின்றனர்.

இத்தகவலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது. (த)


### தவறிவிட்டது

**செல்லத்துரை விஜிதரன்** ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல.0906009159) தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்(காளிகோயிலடி) எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தாவடி. செ.விஜிதரன்.

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் I.O.M, FORUT ஆகிய நிறுவனங்களுக்கு மிக அண்மையில் நவீன வசதிகளுடன் 1800 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ளவும் : 222 5452

### விற்பனைக்கு

NPMF XXXX தொடரிலக்கமுடைய ஸ்கூட்டி பெப் மோட்டார் சைக்கிள்மற்றும் P IV கணனி என்பன விற்பனைக்குண்டு

தொடர்பு: 021 4591310
செல்வசுந்தரா
காரைக்கால்வீதி, மஞ்சத்தடி, இணுவில்

### பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624

(54331)

### மணமகன் தேவை

1981ஆம் ஆண்டு உத்தரம் நட்சத்திரம், பாவம் 20, செவ்வாய் குற்றமற்ற H.N.D.A படித்த வேலை செய்யும் சைவ மணமகளுக்கு அழகான இஞ்சினியர் மணமகன் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி மீரா மகேந்திரன் அவர்களின் அன்புக் கணவர்

**மா.மகேந்திரன்**

(கிராமசேவை உத்தியோகத்தர்)

அவர்களின்அகாலமரணத்தையிட்டு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

விவசாய பீடத்தின் விவசாய இரசாயனவியல்துறையில் பணிபுரியும் திரு.க.சசிகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா பூலோகநாயகி**

காலமானதையிட்டு மிகவும் மனவருத்தமடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]
யாழ். பல்கலைக்கழகம்.

## 61ஆம் நாள் நினைவு நாளும் 24 ஆவது பிறந்த நாளும்.



மண்ணில் 17 . 10 . 1982
விண்ணில் 18 . 08 . 2006

**நாகேஸ்வரன் பிரசாந்தன்** (சாந்தன்)

உணர்வில் நிறைந்த எங்கள் உயிரே சாந்தன்!
உள்ளம் நெகிழ வைத்து மகிழ்வீரே!
மாதங்கள் இரண்டு மறைந்தாலும் மங்குமா?
உன் பாசத்தின் நினைவுகள்.

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
கொக்குவில். அக்கா, அத்தான், மருமக்கள்

(54429)

## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய முன்னாள் அதிபரும், சர்வதேச லயன்ஸ் கழக அச்சுவேலி வட்ட அங்கத்தவருமான

**லயன்ஸ் செ.சுந்தரலிங்கம்**

அவர்கள் கடந்த வியாழக்கிழமை (12.10.2006) இந்தியாவில் இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

வே.பாலசுப்பிரமணியம்
தலைவர். (54415)

ஆ.கா.ராமநாதன்
செயலாளர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்.
அச்சுவேலிவட்டம்.

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் சின்னத்தம்பி



(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சின்னத்தம்பி அவர்கள் 04.10.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் தெய்வானைப்பிள்ளையின் (மரகதம்) அன்புக் கணவரும் கமலாதேவி, மனோகரன், கெங்காதரன், பரமேஸ்வரன் (சுவிஸ்), விமலாதேவி(சுவிஸ்), சிவானந்தன்(கனடா), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம், செல்வராஜா(சுவிஸ்), கௌசல்யா, இரட்ணராணி, சியாமளா (சுவிஸ்), ஜெயரஞ்சினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் கந்தையா காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் இராமலிங்கம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் செல்லக்குட்டி (ஆசிரியர்), செல்லம்மா, காலஞ்சென்ற சிவசம்பு, தம்பு ஆகியோரின் மைத்துனரும் சிவச்சந்திரிக்கா, சிவச்சந்திரன் (லண்டன்), சிவதர்சி, சிவநேசன், காண்டீபன், வினோஜா, சர்மிலன், றெஜிகரன், நவிலன், வசீசன், சாதனா, சுபீட்சனா, சுபீட்சன், சாயி(சுவிஸ்), சகானா, கீர்த்தனா, சந் தனா (சுவிஸ்), நந்தனா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நவீனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.10.2006 வியாழக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.சிவசுப்பிரமணியம்,
சிவன்கோயிலடி, சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
(54425)

## செல்லத்துரை தாமோதரம்பிள்ளை



மந்துவில் வடக்கு குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரான செல்லத்துரை தாமோதரம்பிள்ளை அவர்கள் 15.10.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் அப்பாத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும் இரத்தினத்தின் பாசமிகு கணவரும் வேலாயுதபிள்ளை, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, நடராஜா, தங்கம்மா, அன்னலட்சுமி (சுவிற்ஸர்லாந்து), கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் கணேசபாலேந்திரன் (அதிபர் - கைதடி/குருசாமி வித்தியாலயம்), தவராஜா (மக்கள் வங்கி, சாவகச்சேரி), தருமராஜா (லண்டன்), கலையுணர்பவன் (கனடா), இராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவரஞ்சினி, வாணிஸ்ரீ (யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), மைத்திரேயி, சிவசுகி, சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனும் கலைச்செல்வன் (யா/பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் 2ஆம் வருடம்), கதிர்ச்செல்வன் (யா/பல்கலைக்கழக முகாமைத்துவபீடம் முதலாம் வருடம்), கலையழகன், கலைவேந்தன், பிரணவன், திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.10.2006) திங்கட்கிழமை பி.ப. ஒருமணிக்கு நடைபெற்று, பூதவுடல் மந்துவில் ஞானிகாடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம். (54424)

தகவல்:
தா.கணேசபாலேந்திரன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழர் தாயகத்தை துண்டாடும் நியாயம்

வடக்கு - கிழக்கு இணைப்பு - அதாவது தமிழர் தாயகத்தின் ஒன்றிணைப்பு - சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றது என ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றம் அறிவித்துவிட்டது.

பதினெட்டு வருடங்களாக நீடிக்கப்பட்ட ஒரு நிலைமை தவறானது என்று இப்போது - இந்த நீதிமன்றம் - தீர்ப்பளித்திருக்கின்றது.

ஈழத் தமிழரைப் பொறுத்தவரை இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக் கட்டமைப்பு ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் செயலிழந்த சமயமே, இந்த நீதிமன்றத்தில் இதே பெறுபேறுகளையே எதிர்காலத்தில் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும், அதற்கு அப்பால் நீதியை - நியாயத்தை - எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்றே தமிழர் தரப்புக் கருதி வந்தது. அந்தக் கருத்து சரியானது என்பது இப்போது ருசுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வளவே.

பிரிட்டனிடமிருந்து இலங்கைத் தீவு சுதந்திரம்(?) பெற்ற காலம் முதலே ஸ்ரீலங்கா நாடாளுமன்றம், பெரும்பான்மை இனம் இழைக்கும் கொடுமையின் கருவியாகவே விளங்கி வருகிறது. அங்கு இனவாதமே அரசோச்சுகின்றது. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களே அங்கு யாக்கப்பட்டன. அதுவே வரலாறு.

சிறுபான்மையினரான தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பறிக்கும் - இனத் தனித்துவத்தைப் பேணும் விழுமியங்களைச் சிதைக்கும் - அரசமைப்புச் சட்டங்களும், அவற்றின் வழிவந்த சட்டவிதிகளும் சிங்கள மேலாதிக்கத்தினால் இதே நாடாளுமன்றத்தில்தான் ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டு தமிழர்கள் மீது திணிக்கப்பட்டு வந்தன; திணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் பௌத்த - சிங்கள மேலாண்மையைத் திணிக்கும் 1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பாகட்டும், அதன் பின்னர் சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டு வந்த 1978 ஆம் ஆண்டின் யாப்பாகட்டும், அவை இரண்டுமே இந்த நாடாளுமன்றத்திலேயே யாக்கப்பட்டன. அவற்றைத் தயாரிப்பதிலோ அல்லது பிரகடனப்படுத்துவதிலோ தமிழர் தரப்பு பங்குபற்றவேயில்லை.

தமிழரின் சம்பந்தமோ, சம்மதமோ இன்றி தயாரிக்கப்பட்டு, பலவந்தமாக அவர்கள் மீது திணிக்கப்பட்ட அரசமைப்பின் கீழ், அந்த அரசமைப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்களின் கீழ், அந்த நீதிமுறையின்படி, சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதில் அர்த்தமேயில்லை.

ஸ்ரீலங்காவின் சட்டமுறைமையும், அதை நெறிப்படுத்தும் அரசமைப்பும் இறுக்கமானவை, நெகிழ்வற்றவை. அரக்கவோ, நகர்த்தவோ, நெகிழ்த்தவோ முடியாத சட்ட அடைப்புக்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறது ஸ்ரீலங்காவின் நீதி முறைமை.

இந்த அரசமைப்புச் சட்ட வரம்புச் சுவருக்குள் சிக்கிக் கிடக்கும் ஸ்ரீலங்காவின் நீதி பரிபாலன முறைமை, அதை விட்டு வெளியே வந்து, சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைக்கான வேணவாவைத் தீர்க்கதரிசனத்தோடு நோக்கி, நியாயம் வழங்கும் என ஏங்கிக் காத்திருப்பது பயனற்றது. அது இப்போது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தாயக நிலத்தைத் துண்டாடும் எந்தத் திட்டத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்துக்கும் தெரியும்.

தமிழர்களின் தாயகத்தில் தன்னாட்சி அரசு ஒன்றை நிறுவும் அவர்களின் போராட்டத்துக்கு எதிராக சிங்கள அரசு தொடுத்திருக்கும் அரசியல், இராணுவ யுத்தத்தில், அரசுத் தரப்புக்குத் தோள் கொடுக்கும் தமிழர் தரப்பு சக்திகளுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் ஒன்று.

ஆனால், தமிழர் தாயகத்தைத் துண்டாடும் துரோகத்துக்கு அக்கட்சி கூடத் துணை போகமாட்டாது என்பது நிச்சயம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்கான முயற்சிகள், சர்வதேச அழுத்தம் காரணமாக முன்னெடுக்கப்படுவதற்கு வாய்ப்புகள் தோன்றியுள்ள நிலையில் இவ்வாறு தமிழர் தாயகம் துண்டாடப்படுவதற்கு வழி செய்யும் தீர்ப்பு, இலங்கையின் மிக உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்ற ஆயத்திடமிருந்து வந்திருப்பது அமைதி முயற்சிகளுக்கு விழுந்த மிகத் தடித்த ஆப்பும்கூட.

வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரம், இலங்கையின் உயர்நீதிமன்ற ஆய்வுக்கு உட்பட்டிருந்த சமயம், இலங்கை விவகாரம் குறித்து அறிக்கை வெளியிட்ட இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளான அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைப்பு விடயத்தை நேரடியாகச் சுட்டாமல் கருத்து வெளியிட்டிருந்தன.

"வடக்கு - கிழக்குக்கான விசேட ஏற்பாடுகளில் எந்த மாற்றமும் செய்யப்படக் கூடாது. அப்படிச் செய்வது சமாதானத்தை அடைவதை ஆபத்துக்கு உட்படுத்தும்." - என்று இணைத் தலைமைகள் சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் அந்த அறிக்கையில் எச்சரித்திருந்தன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ், தமிழர் தாயகத்தை இணைப்பதற்குச் செய்யப்பட்ட இந்த ஏற்பாட்டை நிரந்தரமாக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று கிழக்கில் நடத்தப்பட வேண்டும். ஆனால், அதற்கான களச் சூழ்நிலை அங்கு இல்லை.

அத்தகைய நிலைமையில், இந்த இணைப்பு சட்ட வலுவற்றது என்ற உயர் நீதிமன்ற முடிவு, சர்வஜன வாக்கெடுப்பு வரை இணைப்பு நீடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்த இந்தியத் தரப்புக்கும் விழுந்த அடிதான்.

அதேபோல, இந்த ஏற்பாட்டில் மாற்றம் செய்யப்படக் கூடாது, அப்படி மாற்றம் செய்வது சமாதானத்தை அடைவதை ஆபத்துக்கு உட்படுத்தும் என்ற இணைத் தலைமைகளின் கருத்தும் உதாசீனப்படுத்தப்படும் வகையில் தீர்ப்பு வந்துவிட்டது.

இனி என்ன? நீதிமன்றம் கூறிவிட்டது, நீதிக்குக் கட்டுப்படுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று ஜனாதிபதி மஹிந்தரும், அவரது அரசுத் தரப்பினரும் நீதியைத் தலைமீது தூக்கி வைத்து நிலை நிறுத்தப் புறப்பட்டு விடுவார்கள்.

நீதியின் பெயரால் தமிழர் தாயகம் துண்டாடப்படும். இந்நிகழ்வுக்கு இந்தியாவும், அமைதி வழித் தீர்வுக்கு ஒற்றைக் காலில் நின்று வலியுறுத்தும் இணைத் தலைமைகளும் கூறப்போகும் பதில் என்ன? அறிந்து கொள்ள உரிமையுடனும், ஆவலுடனும் காத்திருக்கின்றது ஈழத் தமிழினம்.

# பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயக் குருக்கள் கடத்தப்பட்டுச் சித்திரவதைக்குப்பின் விடுவிப்பு!

## புலிகளுக்கு உதவுபவரா எனக் கேட்டு விசாரிக்கப்பட்டாராம்

கொழும்பு, ஒக்.17

கொழும்பு புறக்கோட்டை பஸ்நிலையத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை பட்டப்பகலில் ஆயுதம் தாங்கியோரால் கடத்திச் செல்லப்பட்ட கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயக்குருக்கள் இரண்டு நாட்களின் பின்னர் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தின் குருக்களான ஜனார்த்தன பா.ஜெகதீஸ்வரக் குருக்கள் கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணிக்கு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் செல்வதற்காக புறக்கோட்டை பஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அச்சமயம், திடீரென அங்கு வந்த நான்கு ஆயுதம் தாங்கியோர் இவரைப் பலவந்தமாக நீல நிற வானொன்றில் கடத்திச் சென்றனர் என்று கூறப்படுகிறது. சுமார் 25 நிமிடங்கள் பயணம் செய்த பின்னர் ஓர் இரகசிய இடத்துக்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வைத்து அவர் சித்திரவதை செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை செய்தவர்கள் சரளமாக தமிழில் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

"புலிகளுக்கும் உங்களுக்கும் தொடர்பு இருக்கின்றதா? புலிகளுக்கு நீங்கள் எவ்விதத்திலாவது உதவி புரிந்திருக்கின்றீர்களா?"

என்றவாறு இவரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டனவாம்.

உடலில் சிகரட்டால் சுட்டு இவர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. இவரைக் கடத்தியவர்கள் சிங்களத்திலும் உரையாடியுள்ளனர். விசாரணை மேற்கொண்டவர்கள் சரளமாக தமிழில் உரையாடியுள்ளனர். இரண்டு நாட்களின் பின்னர் இவர் நேற்று திங்கட்கிழமை காலை 5 மணியளவில் ஜந்துலாப்புச் சந்தியில் கொண்டு வந்து இறக்கி விடப்பட்டுள்ளார்.

இவரைக் கடத்தியவர்கள் இவரிடமிருந்த பணத்தை எடுக்கவுமில்லை. கப்பம் கோரவுமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# கனகரத்னா நினைவாக அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

கல்வியாளரும் ஊடகவியலாளரும் இலக்கியவாதியுமான ஏ.ஜே. கனகரத்னா நினைவாக அஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஏ.ஜே.இன் பல்கலைக்கழக நண்பர்கள் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பல்கலைக்கழக சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், இலக்கிய அபிமானிகள் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கலந்துகொள்வார். (1-202)

# ஜனாதிபதியுடன் அகாஷி நேற்று விரிவாகப் பேச்சு

கொழும்பு,ஒக். 17

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்து நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுகள் மற்றும் தற்போதைய நிலைவரம் என்பன குறித்து இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளார்.

நேற்றுக்காலை அலரி மாளிகையில் இந்தப் பேச்சு நடைபெற்றது. ஸ்தம்பித்துப் போயிருக்கும் இலங்கை அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜப்பான் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமென்றும், அரசும், புலிகளும் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கேற்ப செயற்பட முன்வரவேண்டுமென்றும் யசூசி அகாஷி இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக இந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் தற்போது மாறிவரும் அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் யசூசி அகாஷிக்கு விளக்கம் அளித்துள்ளார்.

யசூசி அகாஷி நேற்றுப் பகல் 1 மணிக்கு அரச சமாதானப் பேச்சுக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் பேச்சு நடத்தினார். சுகாதார அமைச்சில் இப்பேச்சு இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களை யசூசி அகாஷி நேற்று மாலை 3மணிக்கு சந்தித்துப் பேச்சு நடத்தினார். சமாதான முன்னெடுப்புகள் குறித்து இவர் இன்று மாலை 2 மணிக்கு மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீனையும் 3.00மணிக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

பெரும்பாலும் நாளையதினம் கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேசவுள்ள யசூசி அகாஷி, கிளிநொச்சியிலிருந்து திரும்பியதும் மீண்டும் ஜனாதிபதியைச் சந்திப்பாரென அலரி மாளிகை வட்டாரங்கள் கூறின.(ஐ-உ)

# வடக்கு - கிழக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர் ஒருவர் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தனர்.

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்ட விரோதமானது என உத்தரவிடும்படி மனுதாரர்கள் தமது அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் கோரியிருந்தனர்.

### இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும் மீறுகிறதாம்

சட்டமா அதிபர், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் இந்த மனுக்களில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுக்கள் தொடர்பான விசாரணைகளில் தம்மை இடையீட்டு எதிர்மனுதாரர்களாகச் சேர்த்துக்கொள்ளும்படி கோரி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நல்லரத்தினம் தில்லையம்பலம் உட்பட சில தமிழர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைகளுக்கு நடுவில் உயர் நீதிமன்றம் ஏற்காமல் தள்ளுபடி செய்தது.

அந்த இடையீட்டு மனுக்களில் முன்வைக்கப்பட்ட வாதங்களைத் தாங்கள் நிராகரிக்கின்றார்கள் என நீதியரசர்கள் தமது நேற்றைய தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஒட்டி பதில் மனுத் தாக்கல் செய்த எதிர் மனுதாரர்களில் ஒருவரான தேர்தல் ஆணையாளரின் வாதத்தையும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் நிராகரித்தது.

தேர்தல் ஆணையாளரின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பி.பி. இரட்ணாயக்க, 1988 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஒருவரின் நடவடிக்கையை நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்த முடியாது என அரசமைப்புச் சட்டம் கூறுவதை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அதன் காரணமாக இவ்விகாரத்தில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது எனத் தெரிவித்தார்.

ஆனால், அந்த வாதத்தை உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் நிராகரித்தது.

ஜனாதிபதியின் நடவடிக்கையில் நீதிமன்றம் தலையிடவில்லை. ஆனால், அவரது நடவடிக்கையின் பெறுபேறாக பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் சமயத்தில் அதில் நீதிமன்றம் தலையிட முடியும் என்ற வகையில் நீதிமன்றின் நேற்றைய தீர்ப்பு அமைந்தது.

### இணைப்பை நியாயப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது

இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி - ஒப்பந்தம் செய்யப்பட்டு 72 மணித்தியாலங்களில் ஆயுதக் குழுக்கள் முழுமையாக ஆயுதங்களை ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், 1987 ஒகஸ்ட் 5 ஆம் திகதி ஆயுத ஒப்படைப்புக் குறித்து குறியீட்டு நிகழ்வு ஒன்றில் புலிகள் பங்குபற்றிய போதிலும் உண்மையில் ஆயுத ஒப்படைப்பு நிகழவில்லை. அவ்வாறு ஒப்பந்தத்தின் ஓர் அடிப்படை அம்சம் பூர்த்தியாகாத நிலையில் அதன் வேறு ஓர் அம்சத்தை மேற்கோள் காட்டி அதன் கீழ் இணைப்பை நியாயப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வகையில், இந்த இணைப்பு, இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாடுகளையும் மீறும் அம்சமாகவே கொள்ள வேண்டும். - என்று தீர்ப்பில் குறிப்பிட்டது உயர் நீதிமன்றம்.

அடிப்படை உரிமை மீறப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் அது குறித்து உயர் நீதிமன்றத்திடம் அடிப்படை உரிமை மீறல் நிவாரணம் கோர முடியும் என்று அரசமைப்புக் கூறுகின்றது. ஆனால், இங்கு வடக்கு - கிழக்கு இணைப்பு இடம்பெற்று பதினெட்டு வருடங்களாகி விட்டன. எனவே, உயர் நீதிமன்றத்திடம் நிவாரணம் கோருவதற்கான கால அவகாசம் காலாவதியாகி விட்டது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால், 18 வருடங்களுக்கு முந்திய நடவடிக்கை மூலம் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படத் தொடங்கினாலும், அந்த உரிமை மீறல்கள் மேற்படி இணைப்பு மூலம் இந்தக் கணம் வரைத் தொடர்ந்து கொண்டிருப்பதால் கால அவகாசம் முடிந்து விட்டதாகக் கருத முடியாது. - எனத் தீர்ப்பில் உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

### இணைப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் அரசமைப்புக்கு முரணானது

வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டதன் மூலம், பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் ஏனைய மாகாணங்களில் வசிக்கும் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் - குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தின் - மக்கள் அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தங்களது மாகாண சபைக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, தமது பணிகளை முன்னெடுப்பதற்கான உரிமை அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. இதனால், நாட்டின் சகல பிரஜைகளும் சமமான அந்தஸ்தும், உரிமையும் உடையவர்கள் என்ற அரசமைப்பின் 12 (I) பிரிவு, கிழக்கு மாகாண மக்கள் விடயத்தில் இந்த இணைப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீறப்படுகின்றது. - என நீதிமன்றம் தனது தீர்ப்பில் விவரித்தது.

ஆகவே, மேற்படி இணைப்புக்கான வர்த்தமானி அறிவித்தலும், அதைத் தொடர்ந்து வருடா வருடம் நீடிக்கும் வகையில் விடுக்கப்பட்ட அறிவிப்புகளும் அரசமைப்புக்கு முரணானவை; செல்லுபடியற்றவை; சட்ட விரோதமானவை - என்று நீதிமன்றம் தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறாதிருக்கும் வகையில் அங்கு விரைந்து மாகாணத் தேர்தல்களை நடத்தும்படியும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹபரணையில் நேற்று நடந்த தற்கொலை குண்டு தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் தாக்குதலில் சிக்கிச் சேதமடைந்த பஸ்களையும் சிதறிக்கிடக்கும் சடலங்களையும் படங்களில் காணலாம்.

# அரசுத்தரப்புடன் உடன்பாடு செய்த பின்னரே அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பது பற்றி முடிவு

## ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 17

அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரே தீர்மானிப்பதென நேற்றுக்காலை நடைபெற்ற ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஸ்ரீல.சு.க. - ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஐ.தே.க. செயற்குழு அனுமதி வழங்கியது.

ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 11 மணிக்கு ஐ.தே.கட்சி தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நடைபெற்றது. செயற்குழுவில் பல அங்கத்தவர்கள் ஐ.தே.கட்சி அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென கருத்துத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

செயற்குழுக் கூட்டம் ஆரம்பமானதும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீல.சு.கட்சியும் ஐ.தே.கட்சியும் இணக்கம் கண்ட ஆறு விடயங்கள் குறித்து செயற்குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

இதையடுத்து, செயற்குழு உறுப்பினர்கள் இந்த இணக்கப்பாடு குறித்த தமது கருத்துக்களை தனித்தனியாக எடுத்து முன்வைத்தனர்.

செயற்குழுவில் சுமார் 75 உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அநேகர் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பது கட்சியின் எதிர்காலத்தை பாதிக்கும் எனக் கருத்துத் தெரிவித்தனர். இதேவேளை மேலும் சில செயற்குழு உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்களின் நன்மை கருதி அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தனர்.

செயற்குழு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டபின்னர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கலாம் எனத் தெரிவித்தார். செயற்குழு உறுப்பினர்கள் இதை ஏற்றுக்கொண்டனர். (ஐ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுடன் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டன.

வைத்தியசாலையின் கையிருப்பில் இருந்த ஒக்ஸிஜன் முற்றாகத் தீர்ந்து போனமையே இதற்குக் காரணம் என நம்பகரமாக அறியவந்தது.

கொழும்பிலிருந்து ஒக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துவருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், அது கைகூடவில்லை.

கப்பல் மூலம் வெற்றுச் சிலிண்டர்களை எடுத்துச் செல்வதில் எதிர்நோக்கப்பட்ட தாமதமும் ஒருவகையில் இதற்குக் காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒக்ஸிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாயினும் -

இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஒகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பிறகு தரைவழிப் பாதை தடைசெய்யப்பட்டதால், ஒக்ஸிஜன் சிலிண்டர்களை தேவைக்கு ஏற்ப கொண்டுவர முடியவில்லை.

கையிருப்பில் இருந்த ஒக்ஸிஜன் வெகு சிக்கனத்துடனேயே சத்திரசிகிச்சைகளுக்குப் பாவிக்கப்பட்டது. அதனால், கடந்த சுமார் இரண்டு மாதங்களாக அவசர மற்றும் அவசிய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடிந்ததாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இனிமேல் அவசர சத்திர சிகிச்சைகளைச் செய்வதிலும் தடங்கல் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# உடுப்பிட்டியில் கிளைமோர் தாக்குதல் சிப்பாய், பொலீஸ்கான்ஸ்டபிள் மரணம்

உடுப்பிட்டி, ஒக்.17

உடுப்பிட்டி சங்கக்கடையடிக்குச் சமீபமாக ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து நேற்று நண்பகல் 12.45 மணியளவில் சைக்கிளில் பொருத்தப்பட்டு கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவரும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் பலியானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர் குண்டு வெடித்ததில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும்போது வழியில் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. அந்தப் பகுதிக்கான போக்குவரத்து சிலமணிநேரம் தடைசெய்யப்பட்டிருந்தது.

(அ-1-155)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹபரணைக்கு அப்பால் தென்னிலங்கை நோக்கிய பயணத்துக்கு அந்தப் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு ஹபரணை வரை வந்து சேரும் துருப்பினரை அங்கிருந்து ஏனைய இடங்களுக்கு மாற்றி அனுப்பி வைக்கும் மைய நிலையம் ஒன்று தம்புள்ள வீதியில் திஹணபதனவில் உள்ளது.

இவ்வாறு அங்கு வந்து சேர்ந்த இருநூற்றியைம்பதுக்கும் அதிகமான கடற்படையினர் நேற்று மதியம் அங்கு குழுமியிருந்தனர். அவர்களின் பயணத்துடன் தொடர்புடைய பதினைந்து பஸ்களும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன.

அப்போதே வெடிகுண்டு நிரப்பப்பட்ட ட்ரக் ஒன்று அங்கு வந்து மோதி பெரும் சத்தம் மற்றும் பலத்த அதிர்வுடன் வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

இதில் அங்கு நின்ற ஐந்து பஸ்கள் முற்றாக எரிந்து நாசமாகின.

நூறு கடற்படையினர் வரை பலியாகினர்; 150 கடற்படையினர் வரை படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தோர் ஹபரணை மற்றும் தம்புள்ள வைத்தியசாலைகளுக்கு முதலிலும் பின்னர் பிற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் எடுத்து விரையப்பட்டனர். காயமடைந்தோரை ஏற்றி வருவதற்கு ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

உயிரிழந்த கடற்படையினர் மற்றும் ஏனையோரின் சடலங்கள் ஹபரணை வைத்தியசாலை பிரேத அறைக்குக் கொண்டு செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## களநிலை தவிர்ந்த பகுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களுக்கு அதிக இழப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் உதாரணமாக சற்று நேரத்துக்கு முன்னர் கூட புதுக்குடியிருப்பில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்சமயம் அங்கு கண்காணிப்புக் குழுவினர் சென்றுள்ளனர். சரியான சேதவிவரம் இதுவரை தெரியவில்லை.

இப்படியான தாக்குதல்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது இத்தீவில் இருக்கின்ற ஏனைய இராணுவ இலக்குகள் மீது இலக்கு வைக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை மறுப்பதற்கில்லை.

ஆனால், குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக எமக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. இதுகுறித்து நாங்கள் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதியுடன் தொடர்புகொண்டிருக்கின்றோம். அவருடன் பேசிய பின்புதான் இவ்விடயம் தொடர்பாக தெளிவாகச் சொல்லமுடியும்.

கேள்வி:- இத்தாக்குதல் சம்பவத்தில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மறைமுகமாகக் கூறுகிறீர்களா?

பதில்:- சரியாக இத்தாக்குதல் யாருடையது என்று நாங்கள் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் வந்த பின்னரே சொல்ல முடியும்.

கேள்வி:- இவ்விடயம் தொடர்பாக உங்களது கிழக்குப் பிராந்தியத் தளபதியுடன் உடனடியாகத் தொடர்புகொள்ள முடியவில்லையா?

பதில்:- தொடர்பு கொண்டிருக்கின்றோம். உரிய முறையிலான தகவல்கள் இதுவரை எட்டவில்லை.

கேள்வி:- நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பேச்சுக்களில் நீங்கள் கலந்துகொள்வது நிச்சயம்தானா?

பதில்:- எத்தகைய சூழ்நிலையில் சமாதான வழிமுறை மீதான எமது விருப்பை மாற்றிவிடாது. எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் நிர்ணயிக்கப்பட்ட பேச்சுத் தொடர்பான விடயங்களை சமாதானத் தூதுவரிடமும் யசூசி அகாஷியிடமும் தெளிவாகப் பேசவிருக்கிறோம். - என்றார். (க-12)

## கிபிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் வாவியில் வீழ்ந்து மூழ்கியது என்றும் - விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே வீழ்ந்தது என்றும் சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் மேலும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (க-1)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- இத்தாக்குதல் ஆனது உங்களுடைய உளவுத்தோல்வி என்று கருதுகிறீர்களா?

பதில்:- இதனை ஒரு தோல்வி என்றோ அல்லது வேறு வழியிலோ நீங்கள் அர்த்தம் கற்பிக்கலாம். ஆனால், இதில் உண்மை என்னவென்றால், விடுதலைப் புலிகளும், பிரபாகரனும் சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்ற செய்தியே அவர்களிடமிருந்து கிடைத்துள்ளது.

நிராயுதபாணிகளாகத் தமது வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் சென்றுகொண்டிருந்த படையினர் மீதே அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதை பிரபாகரனதும், அவரது குழுவினரதும் ஒட்டுமொத்தப் பயங்கரவாதத்தையே காட்டுகிறது.

கேள்வி:- இத்தாக்குதலின் பின்னும் இலங்கை அரசு பேச்சுக்குச் செல்லுமா?

பதில்:- நாம் பேச்சுக்களில் கலந்துகொள்ளலாம். ஆனால், இந்தச் சூழ்நிலையில் இங்கு அமைதி வருமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நாட்டு மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்குமான எமது கடப்பாட்டின் அடிப்படையில் இந்தச் சமாதானப் பேச்சுகள் அவசியமானதென்று நாங்கள் நினைக்கின்றோம். ஆகவே, 28, 29ஆம் திகதிகளில் சுவிஸ் நாட்டில் நாம் திட்டமிட்டது போன்று பேச்சுகளில் கலந்துகொள்வோம்.

எப்படியிருந்த போதிலும் தமிழ் மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று கூறுகின்ற விடயங்கள் குறித்துப் பேசுவதில் நாம் மிகுந்த அக்கறையுடன் இருப்போம் - என்றார். (க-12)

திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
கலைப் பிரிவுகள்

| | |
|---|---|
| தமிழ் - M.சுரேஸ் | அரசியல் - T.திருமுருகன் |
| இ.நாகரிகம் - க.சத்தியதாசன் | அளவையியல் - P.கமல் |
| புவியியல் - S.கிருஸ்ணா | நா/ஆங்கியலும் - T.சத்தியா |

2008, 2007, Paper Class DAY CLASS
ஆரம்பமாகிவிட்டன

பிரத்தியேக வகுப்புகள்
பொருளியல் P.சண்
2008, 2007, Paper Class, DAY CLASS
ஆரம்பம்: 17.10.2006 4.P.M.
நேர அட்டவணை முதல் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A\L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
18.10.2006 புதன்
A/L 2007 2008 ஆகிய கலை, வர்த்தக வகுப்புகள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
இயக்குநர்
வரதராஜன்.
(54413)

CHEMISTRY
Group
மீள் பரீட்சார்த்திகளுக்கான
பௌதிக இரசாயனம்
அடிப்படை இரசாயன மீட்டல்
ஆரம்பம்:- 17.10.2006 Tue. 2.30 p.m.
By.N.Vakeesan
பல்கலைக்கழகம் முன்பாக
இராமநாதன் வீதி.
* பௌதிகவியலும் ஆரம்பமாக உள்ளது.
* நிறைவான கவனம் எடுக்கப்படும்.
(54386)

A/L Day Class
வர்த்தகப்பிரிவு
Acc. திரு. தவா
Eco. திரு. விக்கி
B.St. திரு. யசோ
Log. திரு. கமல்
ஆரம்பமாகிவிட்டது
கலைப்பிரிவு சிறப்புற நடைபெறுகிறது
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

விற்பனையாகிறது
அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவி போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்.
P.உமாசங்கர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org